**06.12.2023**

**அ.வ.எண். 165/2017**

**வா.சா.1 பிரதீப்குமார் அவர்களின் குறுக்கு விசாரணை**

1. கூடுதலாக ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தேன். எப்போது கூடுதல் வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகமில்லை. நான் கூடுதலாக தாக்கல் செய்த ஆவணங்கள் எங்கு இருந்தது என்றால் எங்கள் வீட்டில் இருந்தது, எனது தகப்பனார் இறந்த பிறகு நாங்கள் தேடி பார்த்தபோது கிடைத்தது. இந்த விவரத்தினை நான் ஆவணங்கள் பெறுவதற்கு தாக்கல் செய்த மனுவில் நான் சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை என்றால் தெரியாது.

2. வா.சா.ஆ 1ல் 2ம் பக்கத்தில் எனது தாத்தா அருளப்பன் பெயரில் தாவா சொத்து கிரையம் வாங்கியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணம் எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே எனக்கு கிடைத்தது. வா.சா.ஆ 1ல் 3ம் பக்கத்தில் பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்தினை அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ 1ல் சொல்லப்பட்டுள்ள கூர் சீட்டினை படித்துள்ளேனா என்றால் எனது தகப்பனார்தான் வழக்கு தாக்கல் செய்தார், அவர் தற்போது இறந்துவிட்டார். 15.03.1993 தேதியிட்ட கூர் சீட்டு குறித்து எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கூடுதலாக தாக்கல் செய்த ஆவணங்கள் குறித்து எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே சொத்துக்களின் அளவீடுகள் குறித்து பிரச்சனை இல்லை.

4. புலவரைபடத்தினை ஏன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு கொடுத்த பாகம் போக மீதமுள்ள பாகத்தை எனது சித்தப்பாவுக்கு கொடுத்ததை காண்பிப்பதற்காக புலவரைபடம் தாக்கல் செய்தேன். அசல் வழக்கு எண் 283/1991 குறித்து எனக்கு தெரியாது. 1991ம் வருடம் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5. 2ம் பிரதிவாதி உடல் திடகாத்தமாக இருக்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு ஏதேனும் வியாதி உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. அது குறித்து ஏதேனும் விசாரித்தேனா என்றால் அதை நான் ஏன் விசாரிக்க வேண்டும்.

6. மெல்கியூர் என்பவருக்கு எவ்வளவு சொத்து பாகம் கிடைத்தது என்றால் எனக்கு தெரியாது. இன்றைய தேதி வரை எனது சித்தப்பா மெல்கியூருக்கு எனது சொத்திற்கு அருகில் எவ்வளவு சொத்து உள்ளது என்று நான் தெரிந்துகொள்ளவில்லை. அந்த விவரம் நான் தாக்கல் செய்த ஆவணங்களில் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது( மீண்டும் சாட்சி ஞாபகமில்லை என்று கூறுகிறார்).

7. வா.சா.ஆ 4 ல் சாட்சி கையொப்பம் செய்தவர்களின் விவரம் எனக்கு தெரியாது எனது தகப்பனாருக்கு தான் தெரியும். வா.சா.ஆ 4 ல் சாட்சி கையொப்பம் செய்தவர்களின் முகவரி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வக்கீல் குமாஸ்தா சண்முகம் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ 5 ல் சாட்சி கையொப்பம் செய்தவர்களின் முகவரி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 4 மற்றும் வா.சா.ஆ 5 ல் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் ஒன்றுதான் என்றால் சரிதான். இரண்டு ஆவணங்களிலும் டி.சண்முகம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4 மற்றும் வா.சா.ஆ 5 ஒரே மாதிரியாக எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ 4 மற்றும் வா.சா.ஆ 5ல் ஆவணங்கள் தயாரித்தவர் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ 4 மற்றும் வா.சா.ஆ 5 எழுதியவர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு தான் தெரியும். வா.சா.ஆ 4 மற்றும் வா.சா.ஆ 5 எழுதியவர் யார் என்று அதில் கையொப்பம் செய்த சாட்சிகளுக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ 4 மற்றும் வா.சா.ஆ 5 ல் உள்ள இரண்டு முத்திரைதாள்களும் எனது தகப்பனார் தாஸ் பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ 4 மற்றும் வா.சா.ஆ 5 ல் முதல் பக்கத்தில் ஒரே வாசகங்கள் உள்ளது என்றால் பெயர்கள் மட்டும் மாறியுள்ளது. வா.சா.ஆ 4 மற்றும் வா.சா.ஆ 5 ல் இரண்டாம் பக்கத்தில் முதல் 15 வரிகள் ஒரே மாதிரி உள்ளது என்றால் சரிதான். எனவே வா.சா.ஆ 4 மற்றும் வா.சா.ஆ 5 ஒரே இடத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

( பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )